**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.199/2017**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07–ம் நாள் சனிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 07.03.2026 | | |
| பெயர்: | கோவிந்தராஜ் (PW2– Cross ) | தகப்பனார் பெயர்: | சுவேதாரண்யம் |
| கிராமம்: | சீர்காழி டவுன் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 61/2026 |

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 07.03.2026</u>**

**(ஆரம்பித்த நேரம் – 12.04 பி.ப)**

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை என்றால் சரிதான். வாதி சீனிவாசன் என்னை சாட்சியம் அளிக்குமாறு நேரில் வீட்டிற்கு வந்து அழைத்தார். வா.சா.ஆ.13 ஆவணமான உயிலின் ஜெராக்ஸ் நகலை காட்டி எனது தகப்பனார் கையெழுத்து என சொல்லி காட்டினார் என்றால் சரிதான். ஜெராக்ஸ் நகலை பார்த்ததன் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் 20 வயதில் உள்ள கையெழுத்திற்கும், அவர் இறக்கும் போது 70 வயதில் உள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் இருக்கும் என்றால் இல்லை ஒரே மாதிரியாக தான் இருக்கும்.

2. எனது தகப்பனார் 20 வயதில் கையெழுத்து செய்த ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியாது. கையெழுத்து வித்தியாசப்படுவதால் தான் ஆவணத்தை நான் தாக்கல் செய்ய இயலாது என்று கூறினேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பொதுவாக சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சாட்சி கையெழுத்து செய்தால் அது சம்பந்தமாக என்னிடம் கூறுவார் என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.13ல் கையெழுத்து

சம்பந்தமாக என்னிடம் கூறினாரா என்றால் ஞாபகம் இல்லை.

3. எனது தகப்பனார் என்னிடம் கையெழுத்து சம்பந்தமாக கூறவில்லை என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கையெழுத்து செய்த மற்ற சாட்சிகள் உயிருடன் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.13ன் அசலை நீதிமன்றத்தில் தான் நான் பார்க்கிறேன் என்றால் சரிதான். உயில் எழுதியவரான பாலகிருஷ்ணன் அவர்களின் கையெழுத்தா என்பதா என்பது எனக்கு நேரடியாக தெரியாது. 3ம் வாதி எனக்கு நண்பர் என்ற காரணத்தால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசல் உயிலில் உள்ள வா.சா.ஆ.17 கையெழுத்து எனது தகப்பனாருடையது அல்ல என்றால் சரியல்ல.

<u>3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

வா.சா.ஆ.13 ல் உள்ள எனது தகப்பனாரின் கையெழுத்து நேரடியாக தெரியது என்றால் சரியல்ல. 3 முதல் 6 பிரதிவாதிகளை இந்த வழக்கில் அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. 3ம் வாதி எனக்கு நண்பர் என்ற காரணத்தால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்–12.20 பி.ப)**